இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 26-06-2024

# கேட்க யோக்கியதை இருக்கிறதா?

**நாற்பது தொகுதியிலும் தோற்ற பழனிசாமி, கள்ளக்குறிச்சி விவகாரத்துக்குப் பின்னால் மறைந்து கொண்டு, 'முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும்' என்று பூனையைப் போல உருட்டுகிறார். இதைச் சொல்வதற்கு அவருக்கு குறைந்தபட்ச யோக்கியதை உண்டா?**

முதலில் அந்தத் தொகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வான செந்தில்குமாரை ராஜினாமா செய்யச் சொல்லட்டும் பழனிசாமி.

கள்ளக்குறிச்சியில் எந்தெந்த இடங்களில் கள்ளச்சாராய விற்பனை நடைபெறுகிறது என்பதை மாவட்ட எஸ்.பி.யிடம் சம்பவம் நடைபெறுவதற்கு 5 நாட்களுக்கு முன்பே அ.தி.மு.க. எம்.எல்.ஏ. செந்தில்குமார் தொலைபேசியில் புகார் அளித்ததாக இரண்டு நாட்களுக்கு முன்பு கூறினார் பழனிசாமி. நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 7 நாட்களுக்கே முன்பே புகார் தெரிவித்ததாகக் கூறியிருக்கிறார். எது உண்மை?

ஒரு வாரத்திற்கு முன்பே மாவட்ட எஸ்.பி.யிடம் தங்கள் கட்சி எம்.எல்.ஏ. புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் பழனிசாமியே செய்தியாளர் மத்தியில் இதைச் சொல்லி இருக்கலாமே?

*** 1993 ஆம் ஆண்டு விழுப்புரத்தில் 9 பேரும், திருத்தணியில் 7 பேரும் இறந்தார்களே. அப்போது ஜெயலலிதா ராஜினாமா செய்தாரா?**

*** 1996 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஜெயலலிதா ஆட்சியில் உறையூரில் 10 பேர் இறந்தார்களே. ஜெயலலிதா ராஜினாமா செய்தாரா?**

*** 2001 ஆம் ஆண்டு பண்ருட்டியில் கள்ளச்சாராயத்துக்கு 52 பேர் பலியானார்களே? அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா ராஜினாமா செய்தாரா?**

*** அதே ஆண்டில் செங்குன்றம் பகுதியில் 30 பேர் இறந்தார்களே. ஜெயலலிதா ராஜினாமா செய்தாரா? செங்குன்றம் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 19 பேர் மீதான விசாரணையில் அ.தி.மு.க. ஆட்சி சரியான முறையில் செய்யாததால் 2018 ஆம் ஆண்டு 19 பேரையும் வழக்கில் இருந்து விடுதலை செய்தது நீதிமன்றம். "35 பேர் கள்ளச்சாராயத்தால் பலியானது வேதனையானது என்றால் அதை நிரூபிக்க அரசு தரப்பு போதுமான ஆதாரங்களை தாக்கல் செய்யவில்லை" என நீதிபதி எம்.வி.முரளிதரன் தீர்ப்பில் குறிப்பிட்டு இருந்தார். இதுதான் அ.தி.மு.க. ஆட்சியின் லட்சணம் ஆகும்.**

**இதே பழனிசாமி முதலமைச்சராக இருந்த போது மீடியாக்களில் வந்த தகவல்களைப் பார்ப்போமா?**

* 2017 ஜீலை 9 - அன்றைய முதலமைச்சர் பழனிசாமியின் சொந்த மாவட்டமான சேலத்தில் கள்ளச்சாராயம் அதிகமாக விற்பனை என நியூஸ் 7 செய்தி வெளியிட்டது.

* 2018 மே 19 - நாகை மாவட்டம் பட்டப்பகலில் கல்லூரிக்கு அருகில் 20 ரூபாய்க்கு சாராயம் விற்கும் சிறுவர்கள் என்ற வீடியோவை நியூஸ் 18 வெளியிட்டது.

* 2019 நவம்பர் 8 - கல்வராயன் மலைப் பகுதியில் பள்ளி சீருடையில் கள்ளச்சாராயம் விற்கப்பட்டதாக செய்திகள் வெளியானது.

* 2019 நவம்பர் 14 - சேலம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் விற்பனை நடந்ததாக ராஜ் டிவி செய்தி வெளியிட்டது.

* 2019 ஜனவரி 11 - பண்ருட்டி அருகே கீழ்மாம்பட்டு கிராமத்தில் 750 லிட்டர் சாராயம் பறிமுதல் செய்யப்பட்டது. முடப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகர் சிவக்குமார் மீது வழக்கு போடப்பட்டது.

* 2019 ஆகஸ்ட் 27 - சீர்காழி அருகே எடக்குடி வடபாதி கிராமத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகரும் வைத்தீஸ்வரன் கோவில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவருமான அஞ்சம்மாள் கைது செய்யப்பட்டார். வைக்கோல் போரில் 47 கேன்களில் 1600 லிட்டர் சாராயத்தை அவர் வைத்திருந்தார்.

* 2020 ஏப்ரல் 14 - யூடியூப் பார்த்து கள்ளச்சாராயம் காய்ச்சிய நபர்கள் என்ற வீடியோவை பாலிமர் சேனல் வெளியிட்டது.

* 2020 ஜீன் 26 - வேலூர் மாவட்டம் பென்னாத்தூர் அருகே கள்ளச் சாராயக் கடத்தல் பாதையை அடைத்தவரை நாட்டுத் துப்பாக்கியால் சுட்ட 3 பேர் என்ற செய்தியை தந்தி டிவி வெளியிட்டது.

* 2020 ஜுலை 28 - மயிலாடுதுறையில் பாண்டி ஐஸ் என்ற பெயரில் கள்ளச்சாராயம் விற்றதாக ஜெயா ப்ளஸ் செய்தி வெளியிட்டது.

* 2021 ஜீன் 26 - ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடியில் கள்ளச்சாரய ஊறல் போட்டு வைத்திருந்த அதிமுக பிரமுகர் நேரு என்பவர் கைது செய்யப்பட்டார்.

* 2021 ஜீலை 27 - கோவையில் கள்ளச்சாராயம் காய்ச்சிய அ.தி.மு.க. பிரமுகர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 150 லிட்டர் சாராய ஊறல், 4 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டது. இவை எல்லாம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் அழியாத சாட்சியங்கள் ஆகும். இதை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து வாய்க்கு வந்த வார்த்தைகளை வாந்தி எடுத்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

* தேசிய குற்ற பதிவேடு ஆவணக் காப்பகம் (என்.சி.ஆர்.பி.) வெளியிட்ட அறிக்கையின் படி இந்தியாவில் கொலைகள் அதிகம் நடக்கும் மாநிலங்களின் பட்டியலில் 6 ஆவது இடத்தை எட்டியது தான் எடப்பாடி ஆட்சி காலம் ஆகும்.

* கொலைகள் அதிகம் நடந்த மாநகரங்களில் நான்காவது இடத்தை சென்னை பெற்றது எடப்பாடி ஆட்சி காலம்.

* இந்திய தண்டனைச் சட்டப்படியான குற்றங்களில் 6 ஆவது இடத்தில் தமிழ்நாட்டை கொண்டு போய் நிறுத்தியவர் பழனிசாமி.

* பொதுமக்கள் மீது சட்டவிரோதமாக கூடியதாக அதிகம் வழக்கு போட்டதில் 4 ஆவது மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்கியவர் பழனிசாமி.

* பட்டியல் மற்றும் பழங்குடியினர் கொலை அதிகம் நடக்கும் மாநிலப் பட்டியலில் 4 ஆவது இடத்தில் தமிழ்நாட்டை ஆக்கியவர் பழனிசாமி.

* பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறையில் 8 இடத்தில் தமிழ்நாட்டை நிறுத்தியவர் பழனிசாமி.

*** தற்கொலைகள் அதிகம் நடக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாட்டை 2 ஆவது இடத்தில் நிறுத்தியது பழனிசாமி ஆட்சிகாலம். இவருக்கு கள்ளக்குறிச்சியைப் பற்றி பேச யோக்கியதை இருக்கிறதா?**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.6.2024) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் 2024 – 2025 ஆம் ஆண்டிற்கான தங்களது துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### அரசுப் பணிக்கு தொகுதி 1–ல் தேர்வு செய்யப்பட்ட

# 95 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜீன் 26 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து, கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் உள்ளிட்ட தேர்வு முகமைகள் வாயிலாக 32,774 நபர்களுக்கும் பல்வேறு அரசுத் துறைகளில் நேரடி நியமனம், உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறை நிறுவனங்கள் என பல்வேறு அமைப்புகளின் வாயிலாக 32,709 நபர்களுக்கும் என மொத்தம் 65,483 நபர்களுக்குப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதிக்கான பணிகளில் 21 துணை ஆட்சியர்கள், 26 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 25 உதவி ஆணையர்கள் (வணிக வரிகள்), 13 கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர், 7 உதவி இயக்குநர் (ஊரக வளர்ச்சி) மற்றும் 3 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள், என மொத்தம் 95 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.06.2024) தலைமைச் செயலகத்தில், 14 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பணி நியமன ஆணைகளை பெற்றுக் கொண்டவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

தொடர்ந்து, தலைமைச் செயலாளர் அவர்கள், புதிதாக பணி நியமனம் பெற்றவர்களை முதலமைச்சர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

பணிநியமன ஆணைகள் பெற்றுக் கொண்ட பயிற்சி அலுவலர்களுக்கு வரும் ஜீலை 1ஆம் நாள் முதல் சென்னை, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் (Anna Administrative Staff College) அடிப்படைப் பயிற்சி தொடங்க உள்ளது.

இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் க. நந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மக்களவைத் தலைவர் தேர்தல்

# எதிர்க்கட்சிகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு அவமதித்துவிட்டது!

## காங்கிரஸ் எம்.பி. ராகுல்காந்தி குற்றச்சாட்டு!



புதுடெல்லி, ஜுன் 26 -

மக்களவைத் தலைவர் தேர்வு விவகாரத்தில் எதிர்க்கட்சிகளை ஒன்றிய அரசு அவமதித்து விட்டதாக ராகுல்காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல்காந்தி, சபாநாயகர் வேட்பாளர் தேர்வில் எதிர்க்கட்சிகளை, பா.ஜ.க. கூட்டணி அரசு அவமதித்து விட்டதாக குற்றம்சாட்டினார்.

எதிர்க்கட்சிகள் அரசுக்கு ஆக்கப்பூர்வமாக ஒத்துழைக்க வேண்டும் என்று பிரதமர் மோடி கூறியதாக நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளதாகவும், ஆனால் ஆக்கப்பூர்வமான விவாதம் நடத்துவதில் பிரதமர் மோடிக்கு அக்கறை இல்லை என்றும் தெரிவித்தார்.

சபாநாயகர் வேட்பாளர் தொடர்பாக ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங், காங்கிரஸ் தலைவர் கார்கேவை சந்தித்து பேசியதாகவும், சபாநாயகர் வேட்பாளரை ஆதரிப்பதாக ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் கூறிய நிலையில், துணை சபாநாயகர் பதவியை எதிர்க்கட்சிகளுக்கு வழங்க வலியுறுத்தியதாகவும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

ஆனால் ராஜ்நாத் சிங் தற்போது வரை பதில் அளிக்கவில்லை என்று ராகுல் குற்றம்சாட்டினார்.

பிரதமர் மோடி எதிர்க்கட்சிகளிடம் இருந்து ஒத்துழைப்பை கோரும் அதேவேளையில், தங்களது தலைவர் கார்கே அவமதிப் பிற்குள்ளாகி உள்ளதாகவும் ராகுல்காந்தி குற்றம் சாட்டினார்.

### மாணவர்களின் எதிர்காலத்துடன் ஒன்றிய அரசு விளையாடுகிறது!

# குஜராத், பீகார் மாநிலங்களை மையமாக வைத்தே நீட் மோசடிகள்!

## ராஷ்டிரிய ஜனதா தளம் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜுன் 26 -

குஜராத், பீகார் மாநிலங்களை மையமாக வைத்தே நீட் மோசடிகள் அரங்கேறி இருப்பதாக ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சியின் மூத்த தலைவர் மனோஜ் குமார் ஜா குற்றம்சாட்டியுள்ளார்.

ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சியின் மூத்த தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான மனோஜ்குமார் ஜா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாடு முழுவதும் நீட் தேர்வு வினாத்தாள் கசிவு உள்ளிட்ட குளறுபடிகள் அனைத்தும் குஜராத், பீகார் மாநிலங்களை மையமாக வைத்தே அரங்கேறி இருப்பதாக குற்றம்சாட்டியுள்ளார்.

மேலும் பீகாரில் பா.ஜ.க. ஐக்கிய ஜனதா தள கூட்டணி அரசு நீட் முறைகேட்டில் தொடர்புடைய குற்றவாளிகளை பாதுகாப்பதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

பல்வேறு முறைகேடுகள் அரங்கேறிய இளநிலை மருத்துவப் படிப்பிற்கான நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்றும் மனோஜ்குமார் ஜா வலியுறுத்தியுள்ளார்.

ஒன்றிய அரசு மாணவர்களின் எதிர்காலத்துடன் விளையாட முடியாது என்று தெரிவித்துள்ள அவர், தேசிய தேர்வு முகமை ஒரு மோசடி நிறுவனம் என்றும், அந்த அமைப்பு கலைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஒன்றிய அரசால் வினாத்தாள் கசிவின்றி ஒரு தேர்வைக்கூட நடத்த முடியாது என்றும், ஒன்றிய அரசு முழுமையாக தோல்வி அடைந்து விட்டதாகவும் விமர்சித்துள்ளார்.

மேலும், நீட் தேர்வு குளறுபடிகளுக்கு பொறுப்பேற்று ஒன்றிய அரசு, மாணவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் மனோஜ்குமார் ஜா தெரிவித்துள்ளார்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (25.06.2024), 2024 – 2025 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக, சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.